செ.வெ.எண்: 28 நாள்: 14.09.2021

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆப., அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

*இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆப.,அவர்கள் தெரிவித்தாவது,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, திருப்பூர் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் நோய் (கோவிட்-19) தடுப்பு நடவடிக்கைகள் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மேலும், கொரோனா வைரஸ் நோயை தடுத்திடும் விதமாக சமூக தனிமை படுத்தலை தீவிரப்படுத்தும் வகையில், நமது மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்திடும் பொருட்டு பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவற்களின் எண்ணிக்கை 20,77,095. இதுவரை 10,58,704 நபர்கள் முதல் தவணையும் 1,98,647 நபர்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. 12.09.2021 அன்று நடைபெற்ற மாபொரும் தடுப்பூசி முகாமில் 1,21,634 நபர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுமக்கள் அனைவரும் வீட்டை விட்டு வெளியே வரும் போதும் மற்றும் பொது இடங்களில் நடமாடும் போதும் உரிய முறையில் முககவசம் அணிவதும், மாவட்டத்திலுள்ள அனைத்து ஜவுளிக்கடைகள், நகைக்கடைகள், மளிகை கடைகள், காய்கனி விற்பனை நிலையங்கள் மற்றும்

உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான வணிக நிறுவனங்களிலும் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் முககவசம் அணிந்திருப்பதுடன் தனிநபர் இடைவெளியை கடைபிடித்தல், கைகழுவுதல், தெர்மல் ஸ்கேனர் போன்ற அனைத்து விதமான சுகாதார நடவடிக்கைகளையும் கண்டிப்பாக கடைபிடிப்பதை உள்ளாட்சி மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

மேலும், சுகாதாரத்துறையின் மூலம் கொரோனா பரிசோதனை மேலும் அதிகப்படுத்த வேண்டும். அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் ஆக்ஸிஜன் வசதிகளுடன் தேவையான அளவு தயார் நிலையில் இருக்க வேண்டும். குழந்தைகள் நல பிரிவுகளில் சிகிச்சைக்கு தேவையான படுக்கைகள் மற்றும் மருந்துகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் சர்க்கரை, உயர் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளை சிகிச்சை அளிப்பதுடன் இல்லாமல் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.லட்சுமணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெகதீஸ்குமார் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**